தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 19-1-57 | சனிக்கிழமை | இதழ் 20

பயங்கரப் பொதுவுடமை, ஜனநாயகத்துக்கு வந்தது எப்போது?

கொலை, கொள்ளை நடத்தி அடிவாங்கிய பிறகுதானே?

இந்தத் தேர்தல் கம்யூனிஸ்டுக் கட்சியின் இறுதி அத்தியாயம்!

இருபதாயிரம் பேர் கொண்ட சூளை, தொழிலாளர் கூட்டத்தில் கண்ணதாசன் முழக்கம்!

சென்னை, தை. 2.

"பயங்கரவாதத்தையே அடிப்படையாகக் கொண்ட பொதுவுடமைக் கட்சி, குடியாட்சிக் குரல் எழுப்பியது எப்போது? அந்தப் பயங்கரவாதத்திலே புகுந்து, தண்டவாளங்களைப் பெயர்த்து, தந்திக் கம்பிகளை அறுத்து, ரகசியம் காப்பாற்றாத கட்சிக்காரனைத் துண்டு துண்டாக வெட்டி, நெல்குதிர்களை உடைத்து, விவசாயிகளின் மாடுகளைப் பிடித்துக்கொண்டு போய், அக்கிரமங்கள் பலபுரிந்து, அதனால் அடி உதை வாங்கி, "அப்பப்பா! இதுபோதும்!" என்ற புத்தி எப்போது வந்ததோ அப்போதுதான் பொதுவுடமைக் கட்சி, ஜனநாயகத்தைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தது. ஆகவே பொதுவுடமைக்கட்சி, தானாக ஜனநாயகத்துக்கு வரவில்லை. அதன் வெறிச் செயல்களுக்குக் கிடைத்த பரிசு, அந்தக் கட்சியை ஜனநாயகத்தில் தள்ளிற்று! உண்டா, இல்லையா? கேட்டுப் பாருங்கள்!"

—இவ்வாறு, சென்னை, சூளை, சுந்தரனார் நாடகக் கலைக் கழகத்தின் சார்பில், நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய தோழர் கண்ணதாசன் குறிப்பிட்டார். இருபதாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களும் பொதுமக்களும் கூடியிருந்து, பேச்சைக் கேட்டு ஆரவாரித்தனர். பொதுவுடமையினரைப் பற்றிக் குறிப்பிட்டபோதெல்லாம், கூட்டத்தில் எழுந்த உற்சாக ஆரவாரம், வானை முட்டிற்று. அவர் மேலும் பேசியதன் சாரமாவது:

"உலக அரசியல் அரங்கில், பொதுவுடமையினரின் செல்வாக்கு அடியோடு அழிந்துவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களுக்குச் சற்றும் இளைத்தவர்களல்ல, ரஷ்ய ஏகாதிபத்திய வெறியர்கள் என்பதை அங்கேரிச் சம்பவங்கள் காட்டத் தொடங்கியதிலிருந்து, உலகம் முழுவதிலும், பொதுவுடமைக் கட்சி, ஏளனத்துக்குரிய ஒன்றெனஆய்விட்டது. கட்சியின் உறுப்பினர்களுக்கே சந்தேகம் தட்டத் துவங்கிவிட்டது. இதுவரை அவர்கள் கனவு கண்டு, மக்களுக்கு எடுத்துச் சொன்ன ரஷ்ய சொர்க்கம் வெறியர்களின் கூடாரந்தான் என்பது, பாமரர்களுக்கும் புரிந்துவிட்டது. உலக மகாயுத்தங்களிலே பல நாடுகளுக்கும் ஏற்பட்ட நாசத்தைவிட அங்கேரி மக்களுக்கு, ரஷ்யர்களால் ஏற்பட்ட நாசம், சதவிகித அளவில் மிக மிக அதிகமாகும். இத்தனை அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை எந்த நாட்டு வரலாறும் கண்டதில்லை. ஆத்திரத்தோடு எகிப்திலே புகுந்த அக்ரமக்கார பிரிட்டனைக் காரசாரமாகக் கண்டித்த ரஷ்யா அங்கேரியில் நிகழ்த்திய-நிகழ்த்தும் திருவிளையாடல்களை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். முதலாளித்துவ வெறியர்களால் உலக சமாதானத்துக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தைக் காட்டிலும் பொதுவுடமை வெறியர்களால் ஏற்படவிருக்கும் ஆபத்தே அதிகம் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

"ரஷ்யாவின் காலநிலைக்கேற்ப, இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் தேசநிலை அடிக்கடி பாதிக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். அங்கேரிப் பிரச்சினையில் இந்தியப் பொதுவுடமைக்கட்சி 'இரண்டாட்டில் ஒரு ஆடு'மாதிரி விழித்ததையும், முதலில் ரஷ்யா செய்தது சரி என்று வாதித்ததையும், பிறகு அஜாய்கோஷ் என்பவர் அந்தர் பல்டியடித்து "அங்கேரிச் செயல்கள் வருத்தத்தைத்தான் தருகின்றன" என்று போலிக் கண்ணீர் வடித்ததையும், சீனா, அங்கேரி அடக்குமுறையை ஆதரித்தவுடன், "அங்கேரிக் கலகம் முதலாளித்துவத் தூண்டுதல்; ரஷ்ய நடவடிக்கை நியாயமே!" என்று திடீர் பல்டியடித்துக் குட்டை குழப்பியதையும், பத்திரிகை படிக்கும் தமிழ் மக்கள் நன்றாக அறிவார்கள்.

ஆனால், நான் இப்போது உங்களைச் சிந்திக்கச் சொல்வதெல்லாம், "இந்த பல்டிகளுக்கு அவசியமென்ன?" என்பதைப் பற்றித்தான்! இந்த நாடு தமிழ்நாடு; இது பொதுவுடமைப் பூங்காவாகத் திகழவேண்டும் என்பதுதான் தமிழகப்பொதுவுடமையினரின் கொள்கை என்றால், இவர்கள் ஏன் ரஷ்ய சர்க்கஸில் ஒரு மிருகமாக மாறவேண்டும்?

"உண்மையில் தமிழ்நாடு வாழ வேண்டும் என்பது பற்றிக் கிஞ்சித்தும் கவலை இல்லை அவர்களுக்கு. "இந்த நாடும் மற்றொரு அங்கேரி ஆகவேண்டும்! ராமமூர்த்தியோ, ஜீவானந்தமோ, ஒரு துரோகக் காதார் ஆகவேண்டும்!"-இதுதான் அவர்கள் ஆசை. இதற்காகப் பணமும் தரப்படுகிறது அவர்களுக்கு என்று கூறப்படுகிறது! ஆம்; பொதுவுடமைக்கட்சி மாஸ்கோவின் ஏஜண்டாகவே இந்தியத் துணைக்கண்டத்தில் செயலாற்றுகிறது!

எல்லா அரசியல் கட்சிகளிலும் இருப்பவர்கள், தங்கள் சொந்த வாழ்க்கைக்குச் சொந்த முறையில் வசதி செய்துகொண்டு கட்சி வேலைகளில் முழுக்க ஈடுபடுகிறார்கள். அவர்களுக்குக் கட்சியிலிருந்து வருமானம் இல்லை. ஆனால், சொந்த வருமானமில்லாத பொதுவுடமைத் தலைவர்களுக்கு, வாழ்க்கை

— 6-ம் பக்கம் —

வாழ்ந்தவர் கெட்டால்...!

★ பேக்கனின் வரலாறு இக் கட்டுரையில் சுவைபடச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.★

அரிய பண்புடைய மக்கள் பெருமையோடு வாழத்தான் செய்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் தவறுகள் புகுந்துவிடுகிற போது அறிவு அவர்களை ஆட்கொள்ளத் தயங்குவதே இல்லை. அவலச் சுவையே பெருக்கெடுத்து ஓடுவதைப் பார்க்கிறோம்.

'தன்னைத் தானே செவ்வனே உணராதவன் தான் அழிந்துபடுகிறான்' என்று ஆல்காட் கூறுகிறான். "என்னை அல்லாமல், பிறர் எவருமே எனக்குக் கேடு செய்ய இயலாது" என்று பறைசாற்றுகிறான் எமர்ஸன்.

இவ்வறிஞர்களின் மொழிகளைக் கூர்ந்து கவனிக்கின்றபோது மனிதன், தன்னுடைய நடத்தையால்-செயலால்-பேச்சால் கெடுகிறானே தவிர, பிறர் கெடுப்பதால் இல்லை என்ற முடிவிற்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

சர் பிரான்சிஸ் பேக்கன் புகழ் ஏணியின் உச்சிப்படியில் ஏறியவர். இடறிக் கீழே விழுந்துவிட்டார். அவலச் சுவையின் சுரங்கமாக அவரின் வாழ்வு அமைகிறது. வியப்பும் திகைப்பும் நம்மைக் கவ்வுகின்றன.

1621 ம் ஆண்டு மே மாதம் 3-ந் தேதி விடிந்தது. லண்டன் மாநகரமே அல்லோல கல்லோலப்பட்டது. தெருவெல்லாம்-வீடெல்லாம் ஒரே பேச்சு. பரதேசி முதல் பிரபுவரை எல்லோருமே ஒரே பேச்சுத்தான் பேசிக்கொண்டிருந்தனர். பிரதம நீதிபதி சர் ராபர்ட் ஹட்டன் என்பவர் பகல் பத்து மணி அளவில் தன் தீர்ப்பினை உலகறியப் பறைசாற்றினார். குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருந்தவர் சர் பிரான்சிஸ் பேக்கன் என்ற பேரறிஞர். பேக்கன் செய்ததாகக் கூறப்பட்ட குற்றங்களுக்கு ஹட்டன் நீதிபதி தீர்ப்புச் சொல்லவேண்டிய நிலையிலிருந்தார். ஒரு 'சர்' செய்த குற்றத்தை மற்றொரு 'சர்' தீர்மானித்தார். மே மாதம் 3-ந் தேதி தீர்ப்பும் கூறினார். லண்டன்-ஏன்-இங்கிலாந்து பூராவுமே ஒரே பேச்சு, தீர்ப்பைக் குறித்து !

அப்படி என்ன தீர்ப்பு !

"பிரான்சிஸ் பேக்கன் 40 ஆயிரம் பவுன் தண்டம் செலுத்த வேண்டும்; டவர்ச் சிறைச்சாலையில் மன்னன் விரும்புகிற காலம் முழுதும் அடைபட்டிருக்கவேண்டும்; அரசாங்க சம்பந்தமான எந்த வேலைக்குமே சிறிது-பெரிது என்ற வேறுபாடு இல்லாமல் எதற்குமே பேக்கன் லாயக்கற்றவர் ஆகிறார். கோர்ட் தலைவாசலில் மிதிப்பதற்கு எக்காலத்திலும் யோக்யதை இழந்தவராகவும் ஆகிறார்."

இதுதான் தீர்ப்பு. இந்தத் தீர்ப்பினை வெறுத்துப் பேசிய பலரோடு விரும்பிப் பேசிய சிலரும் இருக்கத்தான் செய்தனர். இத்தகைய தீர்ப்புக்குரிய பேக்கன், செய்த தீங்கு என்ன என்பதனை தீர்மானிக்கும் முன்னர் அவர் யார் என்று ஓரளவு புரிந்துகொள்ளுவது நல்லது தானே !

1561 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் தேதி நிக்கோலஸ் பேக்கன் என்ற சர்க்கார் உத்தியோகஸ்தரின் 'திருப்புதல்வராக அவதரித்தார்' சர் பிரான்சிஸ் பேக்கன். லண்டன் மாநகரத்திலேயே தன் இளமைக் காலத்தைக் கழித்து வந்தார் பேக்கன். ஆறாம் எட்வர்ட் மன்னனின் ஆசானாக விளங்கிய சர் அந்தோனி கூக் என்பவரின் புதல்வியே பேக்கனின் தாயார். தாய் சிறந்த அறிவாளி. அவளுக்கு இத்தாலிய மொழியும், லத்தீன் மொழியும் தண்ணீர் பட்டபாடு. பேச்சிலும் எழுத்திலும் மேற்கண்ட மொழிகளிலிருந்து எடுத்துக் காட்டுகள் தந்த வண்ணமாக இருப்பாள் என்று அவளைப் பற்றிச் சிலர் கூறுகிறார்கள்.

தாய்க் கல்வியோடு வளர்ந்த பேக்கன், தன் அண்ணனுடன் டிரினிட்டிக் கல்லூரியில் கேம்பிரிட்ஜ் சென்று படித்தார். கல்லூரியில் அவருக்குப் பிடித்தமான பாடங்கள் இரண்டு: ஒன்று அரட்டை, மற்றொன்று வேதாந்தம். அரிஸ்டாட்டலின் சித்தாந்தங்களைப் படிக்கும்போது நையாண்டி பண்ணினார் பேக்கன்.

சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்த பேக்கனின் தந்தை நீதிபதியாக உயர்த்தப்பட்டார். எனவே பேக்கன் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பயிலும்படி வற்புறுத்தப்பட்டார். சட்டத்தையும் சட்டை செய்யாது படித்தார் பேக்கன். பாரிஸில் பேக்கன் இருந்தபோது அவரின் தந்தை இறந்தார்.

ஆட்சி எலிசபெத்தின் கையில் அடங்கிக்கிடந்த சமயம் அது. பர்க்லி என்ற பிரபு ஆட்டிப்படைத்த ராணி ஆடினாள். லார்டு பர்க்லி பேக்கனின் உறவினர். உறவினராக இருந்தும் உதவி செய்தாரில்லை. முன்னேற்றம் கிடைக்காத காரணத்தால், சர்க்கார் வேலையில் சலிப்படைந்த பேக்கன் இசக்ஸ் பிரபுவின் அந்தரங்கக் காரியதரிசியாக வேலை பார்த்து வந்தார்.

பேக்கனின் வாட்டசாட்டமான உடலமைப்பில் ராணி மயங்கி விட்டாள். 'கொடுக்கல் வாங்கல்' விஷயங்கள் அதிகமாயின. இவர்களின் படுக்கை அறையாக டவர் என்ற சிறைக்கோட்டம் பயன்பட்டு வந்தது. எந்தச் சிறைக்கோட்டத்தை உல்லாசபுரி என்று நம்பி இருந்தாரோ அதே சிறைக்கோட்டம் துன்பப்புரியாக மாறி விட்டது பிற்காலத்தில் !

ராணி பலே கெட்டிக்காரி. எந்த அளவில் பேக்கனை உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டுமோ, அந்த அளவிற்குமேல் ஒரு தம்பிடி கூட அதிகமாக உபயோகப்படுத்திக்கொள்ளவே இல்லை. பணக்கார விதவையைக் காதலித்து மணம் புரிந்துகொண்ட பேக்கன் மனைவியின் 'படாடோப' செலவுகளுக்குப் பதில் சொல்லமுடியாமல் திகைத்து நின்றான். அவனைக் கைது செய்ய வேண்டுமென்று ஒரு கூட்டம் கிளம்பியது. ராணியிடம் முறையிட்டனர். கைது செய்யும்படி ராணி உத்திரவிட்டு விட்டாள். எந்தத் தேதியில் அவனைக் கைது செய்யவேண்டுமோ அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து, ராணி பேக்கனை அழைத்துக்கொண்டு, டவர் சிறையில் 'உல்லாசமாகப்' பொழுது போக்கிவிட்டு அரண்மனை திரும்பிவிட்டாள். ராணியின் விருப்பத்தைப் பூர்த்திசெய்த பேக்கன் வீட்டிற்கு அலுப்போடு திரும்பும்போது அவனை அரசியலார் 'கைது' செய்தனர்.

என்னே ராணியின் காதல் ! ராணியின் கடைக்கண் பார்வை திரும்பியது. அவளது இச்சைக்கு ஏற்றபடி நடந்துகொள்வதற்கு வேறு ஆள் கிடைக்காத காரணத்தால் சிறைச்சாலையினின்று விடுதலை பெற்றார். பின்பு அவர் சர்க்கார் வக்கீலாக மாறினார். எசக்ஸ் பிரபு கற்பழித்த குற்றத்திற்குக் கூண்டில் ஏற்றப்பட்டார். சர்க்கார் வக்கீலாக இருந்த பேக்கன் தர்மசங்கடமான நிலையில் நின்று தவித்தார். முன்னாள் முதலாளி எசக்ஸ் பிரபு ; இன்றைய முதலாளி அரசாங்கம் ; இதில் யாருக்காகப் பரிந்து பேசுவது ?

எசக்ஸ் பிரபுவைக் குற்றவாளியாக ஆக்கிவிட்டார் பேக்கன், தன் பேச்சுத் திறமையால் ! நினைத்திருந்தால் பிரபுவைக் காப்பாற்றி இருக்கலாம் ; அப்படிச் செய்யாததால் 'அயோக்கியன்' என்று சிலர் அவரை, பகிரங்கமாகவே வைதார்கள். பேக்கன் கஷ்டப்பட்டபோது பெரும் பணம் தந்து உதவியவர் எசக்ஸ் ; ஆனால் எசக்ஸ் கஷ்டப்பட்டபோது கஷ்டத்தை அதிகப்படுத்தியவர் பேக்கன். 'இது நன்றி கொன்ற பண்புதானே ?' என்றனர் சிலர்.

ராணியின் ஆட்சி முடிந்தது ; ராஜா பட்டத்திற்கு வந்தார். ராஜாவின் பெயர் ஜேம்ஸ். 'என்னிலும் சிறந்த தோழன் உங்களுக்குக் கிடைப்பது அரிது' என்று முடிசூடிய மன்னனுக்கு முதற்கடிதம் எழுதினார் பேக்கன். மன்னன் மதிவானான். எனவே பேக்கனின் திறமையில் மயங்கிவிட்டான்.

ஒருவன் தொலைந்தான் என்றெண்ணி மகிழ்ச்சி அடைவதற்குள் மற்றொருவன் தோன்றி 'இதோ நான் உன்னை லேசில் விடப்போவதில்லை' என்று கூறியதுபோல எதிரிகள் பிறந்தவண்ணமாக இருந்ததை நோக்குகையில் பேக்கனின் உள்ளம் பேதலித்தது ; மகிழ்ச்சி முழு உருவம் பெறுமல் தவித்தது. அரசியல் முன்னேற்றத்தில் தடையாய் நின்ற சிசில் தொலைந்ததும் சர் எட்வர்ட் கோக் என்பவர் பேக்கனை முழுத் திறனோடு எதிர்த்து நின்றார்.

'பெர்மிட்' கொடுத்து 'பிசனஸ்' செய்கிற வழக்கம் அந்தக் காலத்திலும் இருந்தது. அதனைச் சுயநலங் கருதி உபயோகித்தார் பேக்கன். பேக்கனின் பணப்பை நிறைந்தது. அதுபோலவே, சூழ்நிலையில் பகைவர்களும் நிறைந்தார்கள். மெம்பிசோன் என்பவருக்கு 'பேடண்ட்' அனுமதித்துப் பெருந் தொகை லஞ்சமாகப் பேக்கன் பெற்றதை, பகைவர்கள் தெரிந்து கொண்டார்கள். வெறும் வாயை மெல்லுகிறவர்கள் அவல் கிடைத்தால் சும்மாவா இருப்பார்கள் ?

சர் ராபர்ட் பிளம்சின் தலைமையில் இரு பெரிய மனுக்கள் மன்னனிடம் சமர்ப்பிக்கப்பட்டன. மனுவின் சாராம்சம் முழுதும் பேக்கனின் லஞ்சத்தைப் பற்றியே இருந்தது.

பேக்கனை குற்றவாளி என்று அரசியல் வட்டாரம் தீர்மானித்தது. ஆனால் பேக்கன் 'நான் குற்றவாளி இல்லை' என்று பகிரங்கமாகப் பேசினார் எழுதினார் ! இந்தப் புரட்சியின் வேகத்தைக் கண்டு ஜேம்ஸ் மன்னர் பயந்ததோடு நில்லாமல் பேக்கனைக் கைவிடவும் துணிந்து விட்டார். நான் நிரபராதி ; பேக்கனின் சூழ்ச்சியே அதிகம் ! என்று மன்னனின் அறிக்கை வெளியாயிற்று. பேக்கன் கதிகலங்கிவிட்டார். ஒன்பதாயிரம் பவுன் லஞ்சம் வாங்கியதாகத் தகவல் வெளியாயிற்று. பேக்கன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தவணையும் பேச்சுரிமையும் கேட்டார், நம்பிக்கையில்லாத மனத்தோடு ; மன்னருக்கு மன்னிப்புக் கோரி கடிதமொன்று எழுதினார். மன்னர் அக்கடிதத்தைப் படித்துவிட்டு பிரபுக்கள் சபையில் ஒப்படைத்தார். கடிதத்தைத் தேனொழுக நயமாக எழுதியிருந்தார் பேக்கன். பேக்கனின் கடிதத்தைப் படித்து முடித்த பிரபுக்கள் 'பாவம்' மன்னித்து விடலாம், என்ற எண்ணத்தோடு இருந்தனர். லார்டு சேம்பர்லின் அதற்கு இணங்கவில்லை.

'இந்த நசுங்கிய புழுவினிடம் கருணையோடு நடந்து கொள்ளுங்கள்', என்று மன்னனிடம் வாய்விட்டுக் கேட்டான் பேக்கன். எதிர்ப்பினை ஒருபுறம் பார்த்தான் மன்னன். அவன் மறுபுறம் பேக்கனின் நட்பினையும் எண்ணினான். எதிர்ப்பைச் சமாளிக்க முடியாததை உணர்ந்தான். நட்பின் உரிமை புறங்காட்டியது. கோர்ட்டில் நிறுத்தி விசாரிக்கும்படி மன்னன் கட்டளை இட்டான். 'செய்தது குற்றம்; ஒப்புக்கொண்டது உத்தமம்' என்று நாட்டு மக்கள் வாய்விட்டுப் பேசினர்.

'என்னை அரசியலிலிருந்து தள்ளி விட்டனர். பாதகமில்லை ; நீங்கள் தள்ளி விடாதீர்கள். அந்தரங்கக் காரியதரிசியாகவேனும் அமர்த்திக்கொள்ளுங்கள்' என்று மன்னனுக்கு எழுதியும் சொல்லியும் பார்த்தார் பேக்கன். இசைவில்லை மன்னன்.

1625-ல் மன்னன் இறந்தான். இறக்கும்போது ஒரு நீண்ட குறிப்பினை விட்டுச் சென்றான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது : -

"லஞ்சம் வாங்கியது குற்றமென்றால் இங்கிலாந்தில் உள்ள அனைவருமே இந்தக் குற்றத்தைச் செய்யாமலா இருந்திருக்கிறார்கள் ? பேக்கன் பெற்றது நன்கொடை. ஆனால், நன்றி இல்லாத கூட்டம், லஞ்சம் வாங்கியதாக ஊளையிடுகிறது. இது அநியாயம், அநியாயம், அநியாயம் !"

மன்னனின் குறிப்பினை அறிந்த பேக்கன் மகிழ்ந்தான். ★

நாக. முத்தையா

ஒப்புயர்வு கொண்ட நாவல்

கிடைக்குமிடம் :

மலர் நிலையம்

133, பிராட்வே, சென்னை-1.

எண்ணம்

மலர் 3 ‖ 19—1—57 ‖ இதழ் 20

"'தென்றல்' பொங்கல் மலர் இந்த ஆண்டு, முதலணியில் நிற்கிறது" என எழுதியவர்கள், பாராட்டியவர்கள் அனைவருக்கும் என் நன்றி. இந்த ஆண்டில் கூட, முழுக்க மலரிலேயே கவனம் செலுத்தும்படியான சூழ்நிலையில் நான் இல்லை; தேர்தல் சிந்தனைகள், வேலைகள் குறுக்கிட்டன. என்றாலும், கிடைத்த நேரங்களை மலருக்கென ஒதுக்கி ஓரளவு புதுமையாக மலரைத் தயாரித்தேன். இதற்கு மிகவும் ஒத்துழைத்தனர் நமது துணை ஆசிரியர்களும் அலுவலக நண்பர்களும்.

நிற்க;

தேர்தல் நெருங்கிவிட்டது. எனது தொகுதிக்கு நான் செல்கிறேன். தேர்தல் பரபரப்பில், 'தென்றல்'லுக்கு ஏதும் எழுத முடியும் என நான் நினைக்கவில்லை. பத்திரிகையின் ஆசிரியராயிருப்பவர், தானே பலவற்றையும் எழுதவேண்டும் என வாசகர்கள் நினைப்பது இயற்கை. அப்படி எழுதாவிட்டால் பத்திரிகையை வாங்குவதில்லை என முடிவுகட்டிக்கொள்வதையும் அனுபவித்திருக்கிறேன். என்றாலும், இந்த வாரத்திலிருந்து ஆறு வாரங்களுக்கு பெரும்பாலும் நான் எழுதுவதற்கில்லை. தேர்தல் வேலைகள் எவ்வளவு சிரமமானவை என்பது நண்பர்களுக்குத் தெரியாததல்ல. ஆகவே நான் எழுதாவிட்டாலும் தென்றலைத் தொடர்ந்து வாங்கி வளர்க்கவேண்டியது நண்பர்களின் தள்ளமுடியாக் கடமை.

அதோடு, 'தென்றல்' இந்த ஆறு வாரங்களிலும் முழுக்க முழுக்க அரசியல் — தேர்தல் செய்திகளையும் விளக்கங்களையும் கிண்டல்களையும் தாங்கி எட்டுப் பக்கங்களுடன் வெளி வரும். சுருக்கமாகச் சொன்னால், தென்றல் புயலாக வெளிவரும்.

நீங்களும் அரசியல் கிண்டல்கள், கம்யூனிச வேடக்காரர்களை கேலி செய்து எழுதுதல், போன்றவற்றை எழுதி அனுப்பலாம்.

காரம் அதிகமிருந்தாலும் தென்றலில் வெளிவரும்.

ஏஜண்டுத் தோழர்கள் ஒத்துழைப்பார்களாக!

நிற்க;

எனது தொகுதி பற்றிய செய்திகளையும் தென்றல் தாங்கி வரும். அதேபோல், மற்ற தொகுதிச் செய்திகள் எவ்வளவு இருந்தாலும் வெளியிடும்! அனுப்புங்கள்! அனுப்புங்கள்!

அன்புள்ள

கண்ணதாசன்.

★ ★ ★

ஏழைகளாயிருக்கலாம்; ஆனால் ஏமாளிகளல்ல!

"காங்கிரசுக்குக் கோவையில் மட்டும் ரூ. 3½ இலட்சம் தரப்பட்டதாம். இதைப் பெறுவதற்கு, கோவைக்குப் பத்துநாட்கள் நடையாக நடந்தார்களாம்! பல் முப்பத்திரண்டும் தெரிய மில் முதலாளிகளிடம் இளித்தார்களாம்! அதுவும் எனக்குத் தெரியும்.

"இந்தப் பணத்தை, யார் யார் எப்படிச் செலவிடுவது என் பதிலே இப்போது தகராறும்! அதுவும் எனக்குத் தெரியும்.

"ஆனால், காங்கிரசாரிடம் உள்ள பணம், நான் அடிக்கடி கூறியதுபோல, குஷ்டரோகியின் கையிலிருக்கும் வெண்ணெய்க்குச் சமானமாகும். அந்தப் பணத்தில் பன்னீர் வாடை கூட இருக்கலாம்; ஆனால் நம்மிடம் நடைபாதை வியாபாரிகளும், முடிதிருத்துவோரும், உடை வெளுப்போரும் தந்துள்ள பணத்தில் வியர்வையின் வாடை இருக்கிறது!

"பன்னீர் பட்ட பணத்தை வியர்வை பட்ட பணம்தான் வென்றதாகக் கூறுகிறது என்பதைக் காங்கிரசாருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"தைரியமிருந்தால் காங்கிரசார், தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்பே ஓட்டுக்காகப் பணம் தந்து பார்க்கட்டும்; அந்தப் பணத்தை நாணயவான்கள் வாங்கமாட்டார்கள். அப்படியே வாங்குகிறவர்கள் மறுநாளே இதுபோல கடற்கரையில் கூட்டம் போட்டு 'காங்கிரசார் ஓட்டுக்காகக் கொடுத்த இந்தப் பணத்தை உங்களிடம் தந்துவிடுகிறேன்' என்று என்னிடம் தருகிறார்களா, இல்லையா பாருங்கள்!

"ஓட்டுக்களைப் பணம் கொடுத்து வாங்கிவிடலாம் என்ற எண்ணத்திலிருக்கும் காங்கிரசாருக்குச் சொல்லுவேன்—நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல; எங்களிடம் பணம் இல்லாமலிருக்கலாம்; நாங்கள் ஏழைகளாயிருக்கலாம்; ஆனால் ஏமாளிகள் அல்ல! பணம் கொடுப்பதை, நமது தோழர்கள் படம் எடுப்பார்கள்—நினைவிலிருக்கட்டும்! எடுக்கப்படும் படத்தைக் கொண்டு, காங்கிரசாரின் தேர்தல் செல்லாது என்று அறிவிக்க முடியுமோ முடியாதோ—ஆனால், அந்தப் படங்களைப் பத்திரிகைகள் பலவற்றிலும் வெளியிட்டு, காங்கிரஸ் ஓட்டுப் பெறும் இலட்சணத்தை ஊருக்கும் உலகத்திற்கும் பகிரங்கப்படுத்துவோம் என்பதையும் காங்கிரசார் மனதில் கொள்ளட்டும்.—இவ்வாறு, அறிஞர் அண்ணா அவர்கள் கடற்கரையில் ஆற்றிய சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

★ ★ ★

ஐந்தாண்டுத் திட்டத்தில்!

சென்னைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்லவாம்!

மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு தேர்தல் நாதன் அருளும் திடீர் ஞானோதயம்

சென்னை, ஜன. 15.

தேர்தல் நெருங்கும்போது காங்கிரஸ்காரர்கள்—குறிப்பாக மந்திரிமார்கள் எப்படி எல்லாம் நடந்துகொள்வார்கள் என்பதற்குத் தெளிவான எடுத்துக்காட்டாக, மத்திய நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியைக் கொள்ளலாம்.

இந்த ஐந்தாண்டுக் காலமாக, டில்லிப் பெரியவர்கள் தந்த 'கூலிக்'காக, இந்த நாட்டு மக்களின் நலன்களை டில்லி அலட்சியம் செய்து திராவிடருக்கு வஞ்சகம் புரிந்துகொண்டிருப்பதைக் கண்ணால் கண்டும், காணாதவர்போலிருந்த அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இப்போது தேர்தல் நெருங்குகையில், 'தமிழ் நாட்டிற்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, தமிழ் நாட்டில் உள்ள பிரச்சினைகளை வைத்துப் பார்க்கும்போது, 'போதுமானதல்ல' என்று ஒரு கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டாராம்.

அதுவும், கூட்டத்தில் அவர் பேசுவதற்காக எடுத்துக்கொண்ட தலைப்பு 'திட்டத்தில் சென்னை' என்பதாம்! தேர்தல் நெருங்கும்போதுதான், இந்த நாட்டு மக்களைப் பற்றிய சிந்தனை அவருக்கு வருகிறது; கூட்டத்தில் பேசுகிறார்!

ஆசை வார்த்தை

மேலும் அந்தக் கூட்டத்தில், சென்னையின் மின்சார உற்பத்தியை இருமடங்காக்குவது பற்றித் தாம் யோசித்துக்கொண்டிருப்பதாகவும், சென்னையில் ஒரு அணு உலை நிறுவுவதின்மூலம் இதைச் செய்ய முடியுமெனத் தாம் நினைப்பதாகவும் ஆசை வார்த்தை கூறினாராம், அந்த மந்திரி! எப்படியிருக்கிறது பார்த்தீர்களா, காங்கிரசாரின் போக்கு!

—ந. நா.

கம்யூனிஸ்ட், பி. சோ. கட்சிகளின் குழப்பம்: நேரு அலசுகிறார்

கல்கத்தா, ஜன. 16—

"சிந்தனா சக்தி பூராவையும் இழந்துவிட்டனர் நம் தேசக் கம்யூனிஸ்டுகள்; நூறாண்டுக்கு முன்பு ஐரோப்பாவுக்காக வகுக்கப்பட்ட சித்தாந்தங்களையே கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்துள்ளனர். சமீபத்தில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட சில மாறுதல்கள் அவர்களை நிலைகுலையச் செய்துவிட்டன. இப்புது நிலைக்கேற்ப எப்படி நடந்து கொள்வது என்பது புரியாமல் விழிக்கின்றனர் இப்போது" என்று கல்கத்தாவில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பண்டித நேரு குறிப்பிட்டார். இந்நாட்டில் எங்காவது துப்பாக்கிப் பிரயோகம் நடந்துவிட்டால் ஒரேயடியாகக் கூப்பாடு போடும் கம்யூனிஸ்டுகள், ஹங்கேரியில் சோவியத் தலையீட்டை ஆதரிப்பதும், அங்கு ஏறக்குறைய 25 ஆயிரம் பேர் சுட்டு வீழ்த்தப்பட்டிருப்பதைக் கண்டிக்காதிருப்பதும் கேலிக் கூத்தேயன்றி வேறென்னவென அவர் வினவினார்.

"கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரையில் எனது முக்கிய ஆட்சேபம், பலாத்காரத்தில் அவர்கள் பற்று வைத்திருப்பதேயாகும். இப்போக்கு பிசகானது என்பதே எனது திடமான கருத்து. பலாத்காரத்தினால் எந்தப் பிரச்சினையும் தீராது; அதற்குப் பதில் அது, மேலும் சிக்கல்களையே உண்டுபண்ணும்" என்று மேலும் குறிப்பிட்ட நேரு, ராஜ்ய புனரமைப்பை யொட்டிய கலவரங்களெல்லாம் கம்யூனிஸ்டுகள், பிரஜா சோஷலிஸ்டுகளின் கைவரிசையே என்றார். தேர்தலில் அதிக ஓட்டு தேடித்தரும் என்ற எண்ணத்தின் பேரிலேயே அவர்கள் இப்படிச் செய்தனர்; கம்யூனிஸ்டுகளைப் போலவே பிரஜா சோஷலிஸ்டுகளும் திக்குதிசை தெரியாது தவிக்கின்றனர், என்றும் அவர் கூறினார்.

—சு. மி.

புள்ளி விவரம் புரியாதோர் புலம்பல்!

அமைச்சர்களின் பொறுப்பற்ற பேச்சு பற்றி

ஈ. வெ. கி. சம்பத் விளக்கவுரை

மின்னல் வேகத்தில் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்து, தி. மு. கழகத்தின் இலட்சியக் கோட்பாடுகளை மறைத்து, புள்ளி விவரங்கள் பலவற்றை அறிந்தோ அறியாமலோ நாட்டு மக்களிடை குறைகூறிப் பிரச்சாரம் செய்யும் போக்கினை விளக்கி, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை 4-வது வட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒருபகுதி இங்கு தரப்பட்டுள்ளது:

"இன்றையத் தினம் தமிழ் நாட்டிலே நாம் விசித்திரமான ஒரு காட்சியைக் காண்கிறோம் - ஓராண்டுக்கு முன்பு வரை காணமுடியாத ஒன்றை இன்று காண்கிறோம். வருகிற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பக்கம் நிற்கிறது; மற்ற அத்தனைக் கட்சிகளும்-உலகிலேயே கடைந்தெடுத்த பிற்போக்கு வாதிகளான காங்கிரசார் முதல் மிகச் சிறந்த முற்போக்குவாதிகள் என்று எண்ணிக்கொள்ளும் கம்யூனிஸ்டுகள் வரையிலும்-காங்கிரசின் தலைமையில் தி. மு. கழக எதிர்ப்பு அணியில் இருந்து வருகிறதைக் காணலாம்.

"சாதாரணமாக, பொதுத் தேர்தல்களில் பங்கு பெறும் ஒவ்வொரு கட்சியினரும், 'தேர்தலில் எங்கள் கட்சி கலந்துகொள்கிறது; நாங்கள் போட்டியிடுவதற்கான காரணங்கள் இன்னின்ன; வெற்றி பெற்றால் இன்னின்ன செய்வோம்; கல்வித் துறையிலே இன்னின்ன செய்வோம்; பொருளாதாரத்துறை அபிவிருத்திக்கு இன்னின்ன செய்வோம்' என்றுதான் சொல்லக் கூடும்.

"ஆனால் இங்கு நாம் பார்க்கிறோம்-கம்யூனிஸ்டுக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், 'நாங்கள் தேர்தலில் கலந்துகொள்கிறோம்' என்று குறிப்பிட்டுவிட்டு, அடுத்தாற்போல், 'தேர்தலில் கலந்துகொள்ளும் அதே நேரத்தில் திராவிட நாடு பிரிவினையை எதிர்த்துத் தீவிரப் பிரச்சாரமும் செய்வோம்,' என்று தெரிவித்திருக்கிறது. இதிலிருந்து நமக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. நாட்டில் உள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியையும், அதற்கிருக்கின்ற மக்கள் ஆதரவுப் பெருக்கத்தையும் கண்டு மருட்சியும், தங்கள் எதிர்காலம் பற்றிய நடுக்கமும் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்.

அரசியல் அகம்பாவம்?

"மாநாட்டிற்கு முன்வரை நம்மைச் சாதாரணமாக நினைத்து, 'இவர்களுக்கெல்லாம் ஆதரவு ஏது? இவர்களெல்லாம் மக்களின் வேடிக்கைக்காகவும் பொழுது போக்கிற்காகவும்தான் இருக்கிறார்களே தவிர, மக்களுக்கு உழைப்பவர்கள் அல்ல' என்று நினைத்துத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டனர். அந்த அரசியல் அகம்பாவம் அத்தனை பேருக்கும் இருந்து வருவதைக் காண்கிறோம்.

தியாக உள்ளத்தினர் அணிவகுப்பைக் கண்டனர்

மாநாட்டுக்குப் பின்னர் 'இந்த நாட்டின் விடுதலை இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்-இந்த நாட்டில் உண்மையான குடியரசு மாளிகையை எழுப்பும் பரிசுத்தமான கழகம் தி. மு. கழகம் ஒன்றுதான்' என்பதை மக்கள் உணர்ந்துகொண்டு விட்டனர் என்பதையும், தி. மு. கழகத்தின் ஜீவ இலட்சியங்களுக்குத் தங்கள் உடல், உயிர், பொருள் அனைத்தையும் அர்ப்பணிக்கக் காத்திருக்கும் அணிவகுப்பையும் அவர்கள் கண்டனர்.

"இப்படி தி. மு. கழகத்தின் பெருமையையும் ஆற்றலையும் ஒரு புறம் உணர்ந்துகொண்ட அதே நேரத்தில், இதுவரை இல்லாத மாதிரி நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம் என்று கேட்டதுமே சித்தம் கலங்கி, பேசுவது இன்னதென்று தெரியாமல் இடியுண்ட நாகம் போல் அலைந்து திரியும் நிலைமையையும் நாம் காண்கிறோம்.

மிரட்சியுற்றோர் மின்னல் வேகப் பிரச்சாரம்!

"கடந்த சில தினங்களாகப் பத்திரிகைகளில் பார்க்கிறோம், காமராசரும் மற்றும் சுப்பிரமணியமும் தி. மு. கழகத்தை எதிர்த்து ஆளுக்கொரு வாரமாக மின்னல் வேகத்தில் பிரச்சாரம் செய்து வருவதை! அந்த மின்னல் வேகத்தில் சென்னையிலிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வரை சென்ற அவர்கள் என்ன சொன்னார்கள்? நாமும் ஆவலோடுதான் பார்த்திருந்தோம் 'என்ன சொல்வார்களோ' என்று! இந்த நாட்டு மக்களை வடநாட்டுக்குக் காட்டிக்கொடுக்கும் கயமைத் தன்மையைப் பற்றியும் மற்றக் குறைகள் பற்றியும் காங்கிரஸ்மீது நாம் குற்றப் பத்திரிகை தயாரித்து மக்களிடம் எடுத்துக் கூறினோம். ஆனால், அமைச்சர்களோ, நாம் கூறின குற்றச்சாட்டுகளுக்கு எந்தப் பதிலும் தரவில்லை. மாறாக, நம்மீதே குற்றப் பத்திரிகை ஆயுதத்தைப் பிரயோகித்திருக்கிறார்கள்! அதில் சுப்பிரமணியத்தின் குரல்தான் உரக்க ஒலித்தது.

அமைச்சர் குற்றச்சாட்டில் அர்த்தமுண்டா?

"அவர்கள் நம்மீது சொன்ன முதல் குற்றச்சாட்டு என்ன? 'இந்தத் தி. மு. கழகம் என்பதென்ன தெரியுமா?-பெரிய படுபாதகச் செயலையல்லவா செய்திருக்கிறது? இதை மறந்துவிட்டீர்களே' என்று ஆரம்பித்தனர். கேட்ட மக்கள்கூட, 'ஏதோ, என்னவோ?' என்றுகூடத் திடுக்கிட்டுவிட்டார்கள்! 'வெள்ளையன் வெளியேறும் போது இந்தத் தி. மு. கழகத்தினர் மவுண்ட்பேட்டனுக்கு ஒரு எக்ஸ்பிரஸ் தந்தி கொடுத்தார்கள்; அதில் நீங்கள் போகவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள்; இப்படிப்பட்ட கொலைபாதகர்களுக்கா உங்கள் ஓட்டு?-என்று கேட்டாராம்! இதை வாய்கூசாமல் திருநெல்வேலியிலிருந்து மதுரை வரை சொல்லி வந்திருக்கிறார் அந்த அமைச்சர். இதைக் கேட்டதும் நமக்கேகூடக் கொஞ்சம் அதிர்ச்சி ஏற்பட்டது! ஏனென்றால், வெள்ளைக்காரன் இந்த நாட்டைவிட்டு வெளியேறினது-1947 ம் வருடம் ஆகஸ்டு மாதம் 15-என்பது நமது ஞாபகம்; திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றினதோ - 1949 ம் வருடம் செப்டம்பர் மாதம் 17-ந் தேதி - அதுவும் நமது நினைவு! எப்படி இவ்வளவு பெரிய ஒரு புள்ளி விவரத் தவறு இந்த முக்கியமான மந்திரி பதவியில் இருக்கும் மேதாவிக்கு ஏற்பட்டது என்றுதான் தெரியவில்லை.

"ஒருவேளை, இதைக் காமராசர் சொல்லியிருந்தால்கூட நமக்கு இவ்வளவு திகைப்பு ஏற்பட்டிருக்காது. இவரோ, இந்த நாட்டின் நிதி மந்திரி - மதி மந்திரி - நீதிக்கும் மந்திரி; இந்த நாட்டில் எதற்கெல்லாம் பஞ்சமோ அதற்கெல்லாம் இவர்தான் மந்திரி. அப்படிப்பட்ட பெரியவருக்கு எப்படி இந்தத் தவறு ஏற்பட்டதோ?

"ஒரு வேளை, நமது கழகம் கொண்டுள்ள மிகுந்த செல்வாக்கைக் கண்டு, 'இவ்வளவு செல்வாக்குப் படைத்த இந்தக் கட்சி, தோன்றி, குறைந்தது 14 வருடமாவது ஆகியிருக்கும்,' என்று நினைத்துக்கொண்டாரோ என்னவோ?

"இந்தக் குற்றச்சாட்டைத்தான் ஐந்து வருடமாகக் காத்திருந்து காத்திருந்து, இப்போது கம்பீரமாக மக்கள் முன்னிலையில் விசி எறிந்துவிட்டார்!

நம்மை அறிந்த மக்களை ஏய்க்க இயலுமா?

"நம்மீது இரண்டாவதாக அவர்கள் கூறும் குற்றச்சாட்டு என்ன? தி. மு. கழகத்தின் வேடத்தைக் கண்டு பொதுமக்களே-நீங்களெல்லாம் மயங்கிவிடாதீர்கள்; இவர்களெல்லாம் யார் தெரியுமா? பழைய ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சரிகைத் தலைப்பாக்கள், மிட்டா மிராசுகள் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் இப்போது புதுக் கோலத்தில் வந்து மக்களாகிய உங்களை ஏய்க்கப் பார்க்கிறார்கள்', என்பதுதான்!

"இதையெல்லாம் ஆப்பிரிக்காவில் இருப்பவர்களிடம் சொன்னால், வேண்டுமானால் அங்கிருப்பவர்கள் காது கொடுத்துக் கேட்டிருப்பார்கள். ஆனால் இங்கு, இவர்களை யார் என்று தெரிந்து வைத்துக்கொண்டிருக்கும் மக்களிடம் போய் 'இவர்களெல்லாம் யார் தெரியுமா?' என்று நம்மைப் பற்றிக் கூறுகிறார்கள்.

"மக்களிடம் போய் நம்மைப் பற்றி 'சரிகைக் குல்லாய்களின் பரம்பரை' என்று கூறுகிறாரே சுப்பிரமணியம்? சென்னை சட்டசபையிலே மந்திரிகள் வரிசையில் இவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாரே மாணிக்கவேலர்-அவர் யார்? மாஜி ஜஸ்டிஸ் கட்சிச் சரிகைத் தலைப்பா; இன்று கதர்க்குல்லாயைப்போட்டுக்கொண்டிருக்கிறார்! இவர் என்ன தந்தி - தபால் நிலையங்களைக் கொளுத்தினவரா? தண்டவாளங்களைப் பெயர்த்தவரா? போன பொதுத் தேர்தல் வரையிலும் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்துவிட்டு, அதற்குப் பின்னர் இருந்த மிச்சம் மீதிகளில் ஒருவராயிற்றே!

அண்ணா நிபந்தனைக்கு அதுவா பதில்?

"அடுத்தாற்போல், மதுரைக்கு வந்தார்; அவர் பேசுவதற்கு இரண்டொரு தினங்களுக்குமுன் அண்ணா அவர்கள் மதுரைக்குச் சென்று ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார்கள். அதில், 'தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது என்று கேள்விப்பட்டதுமே மாற்றுக் கட்சியினர் குலைநடுக்கம் கொண்டிருக்கிறார்கள்; ஏன் இந்தக் குலை நடுக்கம்? இதைத் தவிர்க்க ஒரு மாற்று யோசனை கூறுகிறேன். நாங்கள் தேர்தலில் நிற்பதாலேயே உங்களுக்குக் குலை நடுக்கம் எடுக்கிறதென்றால், நாங்கள் தேர்தலில் ஈடுபடப் போவதில்லை. ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை; என்ன அந்த நிபந்தனை? இங்கிருக்கிற காங்கிரசார் டில்லி சென்று, இந்த நாட்டின் பொருளாதாரத் திட்ட அபிவிருத்திக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,000-கோடி ரூபாய் பெற்று வரட்டும்; இந்தத் தேர்தலில் வேண்டுமானால் நாங்கள் நிற்கவில்லை' என்று அண்ணா கூறினார்கள்.

"இதைக் கேட்டதும் சுப்பிரமணியத்திற்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது! உடனே சவால் விடும் தோரணையில் பேசினார்: - 'இந்த அண்ணாதுரைக்கு என்ன தெரியும்? பொருளாதாரத்தில் 'அ, ஆ' கூடத் தெரியாது; எனக்குத்தான் 'ஃ' வரை தெரியும்; நான் 2,000 கோடி ரூபாய் புரட்டிக் கொண்டு வருகிறேன். அந்தப் பணத்திற்கு இந்த அண்ணாதுரை திட்டம் தீட்டித் தரட்டும்; அந்தத் திட்டம் சரிதான் என்று அயல்நாட்டு நிபுணர் ஒருவர் கூறட்டும்; அது பொருத்தமானதுதான் என்று அவர் கையெழுத்துப் போட்டுவிட்டால், நான் எனது மந்திரி பதவியை இராஜிநாமாச் செய்துவிடுகிறேன்,' என்று மார் தட்டிப் பேசினார்!

"இதைக் கேட்டதும் நாமேகூடக் கொஞ்சம் அதிர்ச்சியடைந்தோம்! தேவிகுளம், பீர்மேடு, வடக்கெல்லைப் பிரச்சினைகளில் எல்லாம் மிக மிக ஜாக்கிரதையோடு பதவியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த இவருக்கு, தருமருக்கு வந்த தைரியம்போல், இப்போது மட்டும் இந்தத் தைரியம் எப்படி வந்தது என்று ஆச்சரியப்பட்டோம்! அப்படி யோசித்துக் கொண்டிருந்தபோது எதிரே மாட்டிக்கிடந்த காலண்டர் நம்மைப் பார்த்துச் சிரித்தது! 'இதுகூடவா தெரியவில்லை? இவர் இந்த மந்திரியாக இன்னும் 90 நாட்கள் தானே இருப்பார்?' என்று கேட்டுச் சிரித்தது!

"அண்ணா அவர்கள் திட்டத்தை வேறு நாட்டு நிபுணர் ஆராய்ந்து, அது சரிதான் என்று கூறுவதற்குள், இப்போது 'அமைச்ச'ராக இருக்கிற சுப்பிரமணியம் அப்போது அப்படி இருக்கமாட்டார்; வெறும் சுப்பிரமணியமாக இருப்பார்! அந்தத் தைரியத்தில்தான் சவால்விட்டுப் பேசியிருக்கிறார்" என்றும், பின்னர் கழகத்தைப் பற்றியும் விரிவாகப் பேசினார். ★

தேர்தல் விவகாரம்!

சென்ற பொதுத் தேர்தலிலே பல வேடிக்கையான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதிலும் தேர்தல் சாவடியில் நடைபெற்ற வேடிக்கைகள் மிகப் பல. போதாததற்கு வாக்காளர் பட்டியல் கூட வேடிக்கையை இலவசமாகத் தந்தது.

ஒரு அபேட்சகர் யானைப் பெட்டிக்காரராகவும், இன்னொருவர் பூனைப் பெட்டிக்காரராகவும் இருப்பார்கள். வாக்காளர் ஒருவர் இவர்கள் இருவருக்குமே 'ஓட்' போட மனம் வராதவராக இருப்பார். "என்னய்யா யாருக்கு ஓட் போட்டீர்கள்" என்று அவரைக் கேட்டால், "எனக்கு இரண்டு பேரையுமே பிடிக்கவில்லை! அதனால் இரண்டு பெட்டிக்கும் நடுவில் (தரையில்!) போட்டு விட்டேன்' என்று சொல்லிப் பெருமைப்படுவார். இப்படிப்பட்ட வாக்காளர்கள் சென்ற தேர்தலின்போது ஏராளம்!

மாணிக்கம் என்று ஒரு ஆண் வாக்காளர் இருப்பார். தேர்தல் சாவடிக்குச் சென்று 'ஓட்' போடப் போகும் தருணத்தில் 'மாணிக்கம் என்பது பெண் வாக்காளர்; ஆண் வாக்காளரல்ல' என்று தேர்தல் அதிகாரி தெரிவிப்பார். அந்த ஆண் வாக்காளர், மாணிக்கம் என்பது நான்தான் என்றும், பெண் வாக்காளரல்ல என்றும் நிரூபிக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகி விடுவார்.

இன்னும் சிலர், தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலிலே இருப்பதாகத் திடமாக நம்பிக்கொண்டிருப்பார்கள். தேர்தல் தினத்தன்று, தேர்தல் சாவடிக்குச் சென்று ஓட் போடப் போகும் போதுதான் அவர்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தி கிடைக்கும். வேறொன்றுமில்லை, அவர்கள் 'திருப் பெயர்கள்' வாக்காளர் பட்டியலிலே இல்லை என்ற செய்திதான் அவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும்.

இந்தத் தடவை அதுபோல ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு ஆளானவர், சாதாரண வாக்காளர் அல்ல. தற்போது மந்திரி சபையில் இருக்கும் மந்திரிதான்! மத்திய சர்க்கார் மந்திரியாக இருக்கும் கே. என். கட்ஜு, ஜோரா தொகுதியில் நிற்கப்போகிறார். அவரது பெயர் வாக்காளர் பட்டியலிலே இல்லையாம். இதனால் அவர் உடனே ஜில்லா கலெக்டருக்கு மனுச் செய்து கொண்டிருக்கிறார். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், சென்ற முறை எந்தத் தொகுதியில் அபேட்சகராக நின்று மேற்படி மந்திரி வெற்றி பெற்றாரோ, எந்தத் தொகுதியில் அவரது பெயர் சென்ற முறை வாக்காளர் பட்டியலில் இருந்ததோ - அதே தொகுதியில் - வாக்காளர் பட்டியலில் இந்த முறை அவரது பெயர் விட்டுப் போயிருக்கிறது. தேர்தலுக்கு முன்பே பெயர் விட்டுப் போவது பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. அது அவரவர்களுக்கே தெரியும்? நமக்கு குருட்டு நம்பிக்கை கிடையாது. மேற்படி மந்திரிதான், இதை ஒரு அபசகுனமாகக் கருதிக் கொள்வார். ஆனால், இது ஒரு எச்சரிக்கையாக இருக்கலாம் என்று நமக்குத் தோன்றுகிறது. மக்களை மதிக்காத மந்திரிமார்களின் பெயர்களை மக்கள் மறந்துவிடுவார்கள் என்பதைத்தான் இந்த நிகழ்ச்சி சுட்டிக் காட்டுகிறது.

இந்த முறை காங்கிரஸ் அபேட்சகர்களைத்தேர்ந்தெடுத்ததிலும், சில பல வேடிக்கை விநோதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. திருச்சியில் ஒரு காங்கிரஸ் அபேட்சகர், "தான் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கத் தயாராயில்லை" என்று தேர்தல் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தந்தி அடித்திருக்கிறார். சாதாரண கடிதம் போடவில்லை. ரிஜிஸ்தர் கடிதம் கூட அனுப்பவில்லை. தந்தியே அடித்திருக்கிறார். இன்னும் சற்றுத் தாமதித்திருந்தால், 'ட்ரங் காலே' செய்திருப்பார். 'தான் நிற்கவில்லை' என்பதைத் தெரிவிக்க எவ்வளவு அவசரம்! கட்சி தேர்ந்தெடுக்கிறது. ஆனால் அபேட்சகர் மறுக்கிறார். பாவம் காங்கிரஸ்!

இன்னும் இதுபோலப் பல நிகழ்ச்சிகள். பம்பாயில் கூட காங்கிரஸ் அபேட்சகர் தேர்வு முறை அதிருப்தியையே தந்திருக்கிறது. எண்ணற்ற ஊழியர்களும், இரு எம். எல். ஏக்களும் காங்கிரசுக்குத் தலைமுழுக்குப் போட முன் வந்துள்ளனர். அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் முறையிலேயே காங்கிரஸ் கட்சியின் சீர்கெட்ட தன்மை புலப்படுகிறது. தேர்தல் நெருங்க நெருங்க, காங்கிரசாரின் திருக்கோலம் தெளிவாகிக் கொண்டுதான் வருகிறது.

ஊட்டியில் காங்கிரஸ் டிக்கட் பெற்ற ஒருவர், "இந்தத் தேர்தலில் காங்கிரஸ் நிச்சயம் தோற்றுவிடும்! ஆகவே நான் போட்டியிடமாட்டேன்!" என்றுசொல்லி, தான் பெற்ற 'டிக்கட்டை' 'வாபஸ்' செய்கிறார். சென்ற பொதுத்தேர்தலின்போது, இதே நபர் முதலில் சுயேச்சையாக பார்லிமெண்டுக்கு அபேட்சகராக நின்றார். ஆனால், காங்கிரஸ்காரரர் வெற்றி பெற்றார். பாவம்! வெற்றி பெற்ற காங்கிரஸ்காரரர், வெற்றி பெற்ற மூன்று மாதங்களுக்குள் இறந்துவிட்டார். எனவே மறுபடி, தேர்தல் நடத்தவேண்டி வந்தது. காங்கிரஸ் டிக்கட்டுக்கு ஆள் கிடைக்கவில்லை. எனவே முதலில் சுயேச்சையாக நின்ற இவரையே, காங்கிரஸ் டிக்கட்டில் நிற்க வைத்தனர் காங்கிரஸ்காரர். அவரும் வெற்றி பெற்றார். இந்த முறை இவரையே காங்கிரஸ், சட்டசபைக்கு உறுப்பினராக நிறுத்துவதற்குத் தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆனால், இவர் மறுத்து விட்டதோடு மட்டும் அமையாமல், "காங்கிரஸ் தோற்றுவிடும் இந்தத் தேர்தலில்" என்று துணிந்து சொல்லி விட்டுச் செல்கிறார். பாவம் காங்கிரஸ்! யார் யாரை அது தேர்ந்தெடுக்கிறதோ, அதைக் கண்டு மற்றவர்கள் சங்கடப்படுவது ஒருபுறம் இருக்க, தேர்ந்தெடுக்கப்படுபவர்களே சங்கடப்பட்டு, விட்டு விலகி, எட்ட ஓடினால், காங்கிரஸின் கதி என்னதான் ஆகுமோ! ஐயோ காங்கிரஸே!

-தமிழ்ப்பித்தன்.

பாதி பாதி!

பாலதண்டாயுதத்தை விடுதலை செய்!

—ஜனசக்தி

கொடுக்கூர் சுப்பையா, அரிவாள் குப்புசாமி ஆகிய கொலைகாரர்களையும் விடுதலை செய்!

—கொ. கா. சங்கம்

★

பெரு மிராசுதார்களிடம் ஏமாறுதீர்கள்! சிறு மிராசுதாரர்களுக்கு மணலி கந்தசாமி எச்சரிக்கை!

—ஜனசக்தி

எங்களிடம் ஏமாறுங்கள்! தேர்தல் நிதி கொடுங்கள்!

—வராதது

★

கன்னடம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு என்று பிரிந்த பிறகு திராவிடம் எங்கேயிருக்கிறது?

—ம. பொ. சி.

முதலில் பள்ளிக்கூடத்தில் தமிழ் படித்து, பிறகு சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கவும்.

— மாணவன்

★

பசிவந்தால் பத்தும் பறந்து போம். அதில் முதலில் பறப்பது மானம்.

—ஒரு 'காம்ரேட்' சொன்னது

அதனால்தான் நாங்கள் கண்டபடி பேசித் திரிகிறோம்

—சொல்லாதது

★

வடநாடு தென்னாடு என்று சொல்லிப் பிரிவுபடுத்துவதை பேங்க் சிப்பந்திகள் விரும்பவில்லை.

—பி. ராமமூர்த்தி

அடே, மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது என்பது இதுதான் போலிருக்கிறது

—யாரோ ஒருவர்

பொங்கல் விழாவின்போது, வாழ்த்துக்கள் அனுப்பிய கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-கண்ணதாசன்.

பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தென்னரசு
தமிழ்ப்பித்தன்
இராசன்

மறவர் மணிப்புருவின்
மகோன்னதச் சித்திரம்!
வெளிவந்துவிட்டது!
தென்னரசு
எழுதிய
செம்மாதுளை
விலை ரூ. 1-4-0
மலர் நிலையம்,
133, பிராட்வே :: சென்னை.

வைத்தியர் கைவிட்டுவிட்டார்; பிரமுகர்கள் அனுதாபம் தெரிவித்துவிட்டனர்!

கம்யூனிஸ்டுக் கட்சிக்கு நமது இறுதி மரியாதை!

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

தேவை எப்படிப் பூர்த்தியாகிறது? மீண்டும் கேட்கிறேன்; எப்படிப் பூர்த்தியாகிறது? ஆம்; எங்கிருந்தோ - எப்படியோ வருகிறது! (பலத்த ஆரவாரம்)

"கொலைகள் அவர்களுக்குப் பொழுது போக்காகவே அமைந்தது. பாலதண்டாயுதம் வழக்கு, இதற்குக் கண்கண்ட காட்சி. பாலதண்டாயுதம் வழக்கைப் பற்றிச் சட்டசபையிலே ஆச்சாரியார் என்ன சொன்னார்? "அது ஒரு பயங்கரமான வழக்கு; கட்சிவிட்டு மாறியவனைக் கண்டதுண்டமாக வெட்டிய வழக்கு. பாலதண்டாயுதத்தை விடுதலை செய்யமுடியாது. கட்சிக்காழ்ப்பில் செய்யப்படும் கொலைகள் பற்றிய விஷயத்தில் நான் கண்டிப்பாகவே இருப்பேன்!" என்றார்! உண்டா இல்லையா? பொதுவுடமையினரையே கேட்டுப் பாருங்கள்!

"சோறுதான் மானத்தை மூடும் ஆடை" என்றாராம், கம்யூனிஸ்ட் தெனாலிராமன் ஒருவர். (ஆம்; சோற்றுக்காகத்தானே அவர்கள் கட்சிப் பணிபுரிகிறார்கள்!) ஆனால், தோழர்களே! சோறு கிடைத்தால் மானம் காக்கப்படும் என்பது, தத்துவ அடிப்படையிலேயே தவறானது. "சித்தாந்தம் - தத்துவம்" என்று சிலம்பம் பழகும் பொதுவுடமை ஏஜண்டுகளுக்கு நம் அனுதாபம்! "சோறு கிடைக்காவிட்டாலும், மானம் காப்பாற்றப்பட வேண்டும்" என்பதுதான் அடிப்படைத் தமிழ்ப் பண்பு! உறுதியான பண்பு, ஓரிரு ஓட்டை உதாரணங்களுக்காக மாறிவிடாது. "மானம் போயும் உயிர் காவலா!" என்பது தமிழன் பழமொழி. சோறு கிடைக்காத போது மானத்தை விற்பது, கம்யூனிஸ்டுகளின் காரியமாக இருக்கலாம்; அதற்காக, ஒரு இனத்தின் மானமே சோற்றுக்காகத்தான் போகிறது என்று 'கொள்கை பேசுபவர்கள்' பச்சையாகச் சொல்வதானால், மூடர்கள்!

"வீரம் குன்றித் தோற்றவன்-மானம் இழந்தவன்!

"நாட்டைப் பிறர்பால் விட்டவன்-மானம் இழந்தவன்!

"நிர்வாணமாகத் திரிபவன் - மானம் இழந்தவன்!

"தன் இடத்தில் பிறர் பெயர் பொறித்திருக்கக் கண்டும் தலை குனிந்து நிற்பவன் மானங் கெட்டவன்!

"மானம், மனத்துக்கு நகை-உயிருக்கு நகை; வயிற்றுக்கல்ல! கம்யூனிஸ்டுகள் பாடமாகப் படிக்கும் ரஷ்யப் புத்தகங்களில் இது இருக்காது; அதற்குத் தமிழ் நூல்கள் படிக்கவேண்டும்.

"பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் துறந்தது, "சோற்று மான"த்துக்காக அல்ல! பிள்ளையைப் போருக்கனுப்பிய தமிழ் மூதாட்டி "சோற்று மானம்" வாங்க அனுப்பவில்லை! சேரலர் கோதையின் வடநாட்டுச்செலவு, சோறு வாங்க அல்ல!

"சோறு கொடுப்பதால் மானம் காப்பாற்றப்படும் என்றால், விபசார விடுதிகளுக்கும், ஏழைகளுக்கும், அரசாங்கம் அரிசி மூட்டைகள் அனுப்பினால் போதும்; பொதுவுடமைப் போலிக் கூச்சல் தேவையில்லை! ஆனால் உண்மை அதுவல்ல! சோறு, பசி எடுத்தால்தான் தேவை - மானம் எப்போதும் தேவை!

"மயிர் நீப்பின் வாழாக்கவரிமான்" என்பது, தமிழன் திருக்குறள்! ரஷ்யக்குரல் அல்ல!

★

"கொள்கை முழக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது எல்லாக் கட்சியினரின் பார்வையும் ஒரே சமயத்தில் திரும்புவதற்குக் காரணம் என்ன? அதன் பலம்! மற்றக் கட்சிகளுக்குக் கொள்கை பலமும் இல்லை, ஆள் பலமும் இல்லை-இதை யார் மறுப்பார்கள்? கொள்கை பலமிருந்திருந்தால் ஆள் சேர்ந்திருக்கும். மாவில்லை; ஆகவே பணியாரம் சுடவில்லை! தி. மு. கழகம் எப்போதும் கொள்கையையே உயிராகக் கருதி வருகிறது. அதனால்தான் மற்றக் கட்சிகளெல்லாம் தேர்தலுக்கென்று கொள்கை தயாரிக்கும்போது, இது மட்டும் எப்போதும் சொன்ன கொள்கைகளையே உறுதியாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. இந்தப் பண்பு, வேறு எந்தக் கட்சிக்கும் கிடையாது.

அப்போது நமது கொள்கை:

"திராவிட நாடு திராவிடருக்கே!"

இப்போதும் அதுதான்; எப்போதும் அதுதான்!

"நாட்டுப் பிரிவினை நமது மூல முழக்கம்! எதை முன்னிட்டும் இதை மாற்றிக்கொள்ள நாம் தயாராயில்லை!

"இந்த உறுதியைக் கண்டு தான், "காங்கிரஸ் ஜெயிக்கலாம்; முன்னேற்றக் கழகம் தோற்க!" என்று ஒப்பாரி வைக்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். சோஷலிஸ்டுகள் புலம்புகிறார்கள். காங்கிரசுக் கட்சி கதறுகிறது!

"ஆனால், தேர்தல், தி. மு. கழகத்தின் கொள்கைகளை உறுதிப்படுத்தப் போகிறது! நாம் விரும்புவதெல்லாம், கம்யூனிஸ்டுகளின் டெபாசிட்டாவது காப்பாற்றப்படவேண்டும் என்பதுதான்!"

-மேலும் அவர் பேசும்போது, தி. மு. கழகத்தின் கொள்கைகளையும் நிலையையும்விளக்கினர்.

பெருங் கூட்டமும் அந்தப் பேச்சைச் சுவைத்தே கலந்தது.

(தெ. நி)

ராம் ரேடியோ சர்வீஸ்

டீலர்ஸ் அண்ட் இஞ்சினியர்ஸ்,

புதுக்கோட்டை

பிலிப்ஸ்

PHILIPS

◉ ரேடியோ
◉ ஒலிபெருக்கிக் கருவி
◉ இன்பிராபில் லாம்ப்
◉ பிலி ஷேவிங் செட்

முதலியவைகள் கிடைக்கும்.

★ விழாக் காலங்களில் ஒலிபெருக்கிகள் சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

★ ரேடியோக்கள் ஒலிபெருக்கிகள் முதலியவைகள் மிக நல்ல முறையில் சர்வீஸ் செய்து தரப்படும்.

விவரங்களுக்கு:

ராம் ரேடியோ சர்வீஸ்

தபால் பெட்டி நெம்பர் 2.

கீழராஜ வீதி : : புதுக்கோட்டை

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி

சித்த வைத்தியசாலை.

57 வருட அனுபவம் பெற்றது

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெற்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெற்பம் தரிக்க வேண்டுமானால் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ 7-10-0

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனாம்.

பிரதம வைத்தியர் and மானேஜர் :—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமண்ய ஐயர்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்தவைத்தியசாலை,

தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ 219) பழநி. (S.I.)

தனி நபர் வழிபாடு

★ சத்தியவாணி முத்து ★

அரசியல் துறையில், "தனி நபர் வழிபாடு" ஒரு ஆபத்தான தத்துவமாகும். அதன் வளர்ச்சி, குடியரசு, தட்ப வெட்ப நிலையைக் கெடுத்து எதேச்சாதிகார சூழ் நிலையை உருவாக்கிவிடும். இதைத் தான் புரட்சிக் கவிஞர்பாரதிதாசன், "ஒரு மனிதன் தேவைக்கே இந்த தேசம் உண்டென்ருல் அத்தேசம் ஒழிதல் நன்ருகும்" என்று பாடினர். தத்துவத்தைச் சாடினர். மக்களாட்சி மலர்ந்ததடா என்று கூவினர்.

ஒரு நாட்டின் வரலாறு, தனி நபர்களின் வரலாறு அல்ல! மக்களின் எண்ணங்களின் அரசியல், பொருளாதார, சமூக வரலாறுகளின் வரலாருகும். மாளிகையிலே வாழும் மன்னன், அவனுக்குத் தாள் பணிந்து கிடக்கும் சேவகர்கள், மன்னனை ஆட்டிப் படைக்கும் பைங்கொடியாள் – இவர்களின் பின்னல் வரலாருக வழியில்லை... ஒரு நாட்டின் வரலாற்றின்மூலம், அந்த நாட்டில் வாழும் மக்கள் தொகுதியின் சிந்தனை ஓட்டத்தை, எண்ணப் போக்கை நாம் தெளிவாகத் தெரியவேண்டும். அவர்களின் விருப்பு வெறுப்புகள், ஆசைகள், கனவுகள், வரலாற்றின் உயிரோவியமாகும். ஆக வரலாற்றின் மையப் பொருள் மக்கள், தனி நபர்களல்ல.

தனி நபர்கள் ஒருவேளை, வரலாற்றின் போக்கை ஓரளவுக்கு மாற்றியிருக்கக்கூடும். ஒருவேளை உருவாகின்ற வரலாற்றை வகைப் படுத்தியிருக்கக்கூடும். வரலாற்றின் தோற்றத்திற்கும், முறைக்கும், பெரும் போக்கிற்கும் அவர்களே காரணஸ்தர்களாகயிருக்கமுடியாது. நேற்றைய அரசியல்தான் இன்றைய வரலாறு! இன்றைய அரசியல் நாளைய வரலாருக உருவெடுக்கும்.

உலக வரலாற்றில், ஒரு பறவைப் பார்வை செலுத்தினுல்,நாம் அங்கே வரலாற்றை உருவாக்க, தம் போக்கிற்கு மாற்றிவைக்க, அதையே "வரலாறு" என்று வையத்திற்கு வழங்க முயற்சித்த தனி நபர்களைச் சந்திக்கலாம். அவர்களின் எண்ணங்களும் கொள்கைகளும் ஆபத்தானவை! எங்கோ ஒரு தனியிடத்தில் அமர்ந்துகொண்டு, அந்த நிலைக்கேற்ப வெளிவரும் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு வரலாறு தீட்ட முனைந்திருக்கிருர்கள். அதிலே பன்னீரின் மணம் உண்டு! மலர்ச்சிரிப்புண்டு-தனது வாதத்தை வலியுறுத்த முனைந்ததனுலே ஏற்பட்ட, களரி உண்டு-கறை உண்டு. ரத்தமுண்டு! ஆனுல், கண்ணீரில்லை, இதயமில்லை, உணர்ச்சிக் கோர்வைகள் இல்லை – பொதுக் கணக்கில்லை-புதுப் பார்வையில்லை.

அந்தத் தனி நபர்களின் அந்தரங்க வாழ்க்கை, குப்பை கூளமாக இருக்கும். துதிபாடுவோர், பல்லிளிப் போர் சமய முறைப்படிக்கெல்லாம் பொதுநலங் கெடுத்து,தன் நலம் நாடும் கொடுமையாளர், குட்டுப்பட்டாலும்மோதிரக்கையால் படவேண்டும் என்றகீழ்த்தரமான கருத்துடையோர், சேவகஞ் செய்வோர், தாசர் புத்தி தலைக்கேறியோர் – 'ஆமாம்' போடுவோர், இன்னபிற உதவாக்கரைகள் அந்த "தனிநபரின்" வீரப் பிரதானிகளாவார்கள். "நானே எல்லாம்" இது அந்தத் தனி நபரின் அரசியல் அரிச்சுவடி – இப்பேர்ப் பட்டவர்கள், தயாரித்த வரலாற்றுச் சுவடிகளுக்கு-காலம் கறையானுயிற்று! அவர்களுக்கு, காலமே காலனுயிற்று! வெட்டப்பட்ட சார்லஸ், சுட்டுக் கொல்லப்பட்ட முசோலினி – தற்கொலைக்குத் தன்னை ஒப்படைத்த ஹிட்லர்-இவர்கள் போன்ருேர் தனி நபர் வழிபாட்டை அரசியல் கோட்பாடாக மாற்றி அழிந்து பட்டவர்களாவார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு, மாஸ்கோவிலிருந்து 'தனிநபர் வழிபாடு ஒழிக!' எனும் குரல் கிளம்பிற்று. குரல் கிளப்பியவரின் ஆத்திரம் ஸ்டாலின் கல்லறையிலேயே புகுந்து விளாசியிருக்கிறது. இந்தப் போக்கை, காலங்கடந்து, இந்திய கம்யூனிஸ்டுகள் உணர்ந்துகொண்டார்கள். அதுவும் அவர்கள் கற்றுக் கொடுத்ததற்குப் பிறகு! நமது ஆழ்ந்த அனுதாபம் அவர்களுக்கு.

இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் வரலாற்றிலும் தனி நபர் வழிபாடு வளர்கிறது. அதன் கவர்ச்சிப் பொருள் பண்டித நேரு அவர்கள் ஆவார்கள்! ஒரு கட்சி ஒரு தலைவன் கொள்கை இங்கே ஆபத்திற்குரிய அளவு, வளருகிறது. அதன் விளைவாக பலம் பொருந்திய எதிர்க்கட்சி உருவாகும் காலம் தாழ்த்தப்படுகிறது. படித்தவர்களும், படியாதாரும், உணர்ந்தவர்களும், உத்தமர்களும்கூட இந்தக் கோட்பாடெனும் பலிபீடத்தின் ஆடுகளாகி விட்டனர். ஆபத்தான இந்த அரசியல் தத்துவம் பிடுங்கி எறியப் படவேண்டும்.அப்போதுதான், ஜனநாயகம் வளரும். வாழ்வு மலரும்!

வெளிவந்து விட்டது!
விற்பனையாகிறது!

சினிமா டைரி 1957

நட்சத்திரங்கள் பக்கத்திற்குப் பக்கம் அலங்கரிக்கும் நூதன டைரி இது ஒன்றே.

அபிமான நட்சத்திரங்களின் கார் நெம்பர், போன் நெம்பர், விலாசம், நிறம் மற்றும் நடித்த படங்கள்பற்றிய குறிப்பு.

புரொட்யூசர்கள், டைரக்டர்கள், கதை வசனகர்த்தாக்கள் போட்டோவுடன் இவர்கள் பற்றிய குறிப்புடன் விலாசம் உண்டு.

பேசும்பட ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் ஜாபிதா நீங்கள் அறியவேண்டிய அம்சமாகும்.

விலை ரூ. 2.
தபால் செலவு 12 அணு.
(இலங்கைக்கு மட்டும் வி. பி. பி. உண்டு.)

கதர்லன் பப்ளிகேஷன்ஸ்
20, கல்லுக்காரன் தெரு,
சென்னை-4.

"கரிசல் காட்டுப் பொழியிலே கருங் கழனிப் பாதையிலே"

'காதல்'—இதிலே வெற்றி கண்டவர்கள் சிலர்; தோல்வி கண்டவர்கள் பலர். அந்தப் பலருக்குள் நானும் ஒருவன்.

"நாங்கள் சிரிச்சு மகிழ்ந்திருந்தோம்; ஒரு 'சின்னப் பயல்' இடையில் வந்தான்; அந்தச் 'சின்னப் பயலாலே' சீரழிந்தோம் இருவருமே." அந்தச் 'சின்னப் பயல்' தான் என் காதலியின் 'தற்காலக் கணவன்.' அவனுக்கும் தெரியும், நான் அவன் மனைவியின் 'முற்காலக் காதலன்' என்று.

அவசர சோலி காரணமாக, ஒரு நாள் அயலூர் சென்று கொண்டிருந்தேன். பாதை முழுவதும் கரிசல் நிலம். பாதையோ ஒத்தையடிப் பாதை. பாதையின் இரு பக்கத்திலும் பருத்திச்செடி கொழுத்திருக்கிறது. முழங்கால் உயரத்தில் செடி வளர்ந்திருக்கிறது. அங்கங்கே பெண்கள் பருத்திக் களை எடுக்கிருர்கள்.

நான் நடந்து செல்லும் பாதைக்குப் பக்கத்திலே என் காதலி களை எடுக்கக் கண்டேன். அவள் ஒருத்திமட்டுந் தான் பருத்திக் களை எடுக்கிருள். அவளும் தற்செயலாக வழியே போகும் என்னைப் பார்த்துவிட்டாள். குனிந்து, களை எடுத்த அவள், என்னைக் கண்டதும் நிமிர்ந்து நின்ருள். நேர்கொண்டு பார்த்தாள். நானும் பாதையிலே நின்றேன்.

முன்னுலெல்லாம் அவள் எப்படிப் பேசுவாள்! என்னைக் கண்டதுமே ஓடிவருவாள்; ஒரு முத்தம் தருவாள். இனிக்க இனிக்கப் பேசுவாள். 'இழுத்துப் பறித்து' என்னை என்னவெல்லாமோ செய்வாள். ஒரு சமயம் இதே போல நானும் பாதை வழியே போய்க்கொண்டிருந்தேன். அவளும் களை எடுத்துக் கொண்டிருந்தாள். அன்று, அவளை நான் பார்க்கவில்லை; அவளோ என்னைப் பார்த்து விட்டாள். உடனே அவள்,

> **"பருத்திக் காட்டுப் பொழி வழியே**
> **பார்வையாய்ப் போர சாமி**
> **செருப்பு வாங்கி நான் தருவேன்**
> **சித்திரக் கால் நோகாமல்"**

—இப்படி 'வள வள'ண்ணு பலப் பல பேசுவாள். இதெல்லாம் கலியாணமாவதற்கு முன்பு.

ஆனுல் இப்போது, அடுத்தவனைக் கைப்பிடித்து விட்டாள். எனவே ஊமை வேடம் போட்டு உம்மென்றிருக்கிருள். நின்ற இடத்திலேயே நிற்கிருள்; என்னையே பார்க்கிருள்; சிரிக்கிருள். ஆனுல் அவள் பேசவில்லை. பேசாது போக எனக்கு மனமில்லை. எனவே பேசினேன்;

> **"கானுக் கரைசலிலே**
> **களை எடுக்கும் பெண்மயிலே**
> **நிலக்கருங் குயிலே! நான்**
> **நிக்கட்டா, போகட்டா"**

—இதைக் கேட்டதும் அவள் முகம் மாறிவிட்டது. அந்தச் செல்லச் சிரிப்பும் ஓடிவிட்டது. இப்போது 'விக்கி-விக்கி' அழ ஆரம்பித்தாள். அழுகையோடு அழுகையாக,

> **"நிக்கச் சொன்னு நல்லாயில்லே**
> **போகச் சொன்னுப் பொல்லாப்பு**
> **நானென்ன செய்யிறது**
> **நானெருத்தன் பெண்டாட்டி"**

இதற்குப் பிறகும் அங்கு நான் நிற்கலாமா? நின்ருல், அது எனக்கும் நல்லதல்ல; அவளுக்கும் நல்லதல்ல! எனவே அடி எடுத்து வைத்தேன். என் வழியைப் பார்த்துச் சென்றேன்.

—அ. பிச்சை.

நன்மணம் சேர்க்கும் நலமதனைத் தான்நல்கும்
அண்ணு பத்தியென்றே அறி!



ஆசிரியத் தோழருக்கு

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். சென்னை நகரில் சுகாதார விதிகள் வரவர அசட்டை செய்யப்பட்டு வருகின்றன. கார்ப்பரேஷன் பல விஷயங்களில் கண்ணை மூடிக்கொண்டு இருக்கின்றது. நெடு நாட்களாக குழாய்த் தண்ணீரில் தூசுகள் வந்து கொண்டிருந்தன. தற்போது அட்டைப் புழுக்களே வந்துவிட்டன. சில தினப் பத்திரிகைகள் கூட அந்தப் புழுக்களின் படத்தைப் பிரசுரித்திருந்தன.

உண்மையில், மனித உயிருக்கு மிகவும் தேவையானது தண்ணீர். உலகின் அமைப்பிலே கூட மூன்று பாகம் தண்ணீர்; ஒருபாகம் தரை. செய்யும் உணவு அனைத்திலும், தண்ணீர் கலக்காமல் இருப்பதில்லை. அவ்வாறிருக்க, அப்படித் தேவைப்படுகிற தண்ணீரைக் குடிக்க முடியாமல் ஒரு ஆபத்து ஏற்பட்டால், மனிதன் எப்படித்தான் வாழ்கிறதோ தெரியவில்லை!

நகர்ப்புறத்தில்-நல்ல சுகாதார வசதிகள் படைத்த இடத்திலேயே தண்ணீரில் அட்டைகள் நெளிந்தால், பாவம், கிராமத்து மக்களுடைய வாழ்க்கையைப் பற்றி எண்ணுவதற்கு என்ன இருக்கிறது?

இதைவிட மனதுக்கு வருத்தம் தரும் செய்தி இன்னொன்று இருக்கிறது. இம்மாதிரி அட்டைகளால் ஆபத்து இல்லையாம். இப்படி உதவி சுகாதார அதிகாரி ஒருவர் சொல்லியிருக்கிறார். உண்மையிலேயே பொறுப்பற்ற தன்மை, சர்க்காரிலும், சர்க்கார் உத்தியோகஸ்தரிடமும் மிகுந்து காணப்படுகிறது என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?

மேலும், கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் தன் வீட்டுக் குழாயில் வந்த அட்டைப் புழுக்களைப் பிடித்து ஒரு தினசரிப் பத்திரிகைக்கு அனுப்பி இருக்கிறார். அந்த அட்டைகள் இரத்தத்தை உறிஞ்சும் தன்மையுடையவை என்றும் எச்சரித்திருக்கிறார். அவரது எச்சரிக்கையை லேசாக எண்ணுவதற்கில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதை அசட்டை செய்து வருவதாகத் தெரிகிறது. இன்று அட்டை வரும், நாளை அதை விடப் பெரிய பூச்சி ஏதாவது வரும். பிறகு தண்ணீர்ப் பாம்பு கூட வந்துவிடும். அந்த அளவுக்கு மோசமான நிலைமையில் இருக்கிறது கார்ப்பரேஷன் சுகாதார இலாகா. இந்த நிலைமையை அகற்ற கார்ப்பரேஷன் இனியாவது முன்வருமா? அதற்குரிய வழிவகைகளைச் செய்யுமா?

அன்புள்ள,
மாசிலாமணி
சென்னை-14.

★

அன்புடையீர்,

"நியூ டில்லி" என்ற பேசும் படம் கண்டிருப்பீர்களெனக் கருதுகிறேன். அப்படம் இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவி வரும் மொழி வெறியைப் போக்கி ஒரே நாடு என்ற 'உயர்ந்த லட்சியத்தை'ப் போதிப்பதாக சஞ்சிகைகள் அறிவித்தன. ஆனால் அப் படத்தின் குறிக்கோள் வேண்டுமென்றே தமிழனை அவமானப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டதோ எனக் கருதும்படி காட்சியளிக்கிறது.

கதை, தமிழ்க் குமரியை மணக்க விரும்பிய ஒரு பஞ்சாபி கதாநாயகன் தன் தந்தை என ஓர் தமிழனை அழைத்து வந்து பெண்ணின் தகப்பனாரிடம் தெரிவிக்கிறான். எதிர்பாராதவிதமாக அங்கு கதாநாயகனின் தந்தை வரவே கதாநாயகன் வைத்தியராகவும் போலித் தந்தை நோயாளியாகவும் நடிக்கிறார்கள். நோயால் துடிக்கும் மனிதனின் முகத்தில் அங்கு வந்த பஞ்சாபி தந்தை தன் மிதியடியைக் கழற்றிவைக்கிறார். அது நோயைக் குறைக்கும் என மூட நம்பிக்கை போலும். இது பெருத்த அவமானம் தமிழருக்கு எனக் கருதுகிறேன்.

இக்காட்சி இல்லாமல் எவருடைய மனதும் நோகாமல் நல்ல முறையிலே படம் எடுத்திருக்கலாம். ஆனாலும் தெரிந்து தவறு செய்கிறார்கள் என்றால் இதை அறியாமை என்பதா அல்லது திமிர் என்பதா என்பதை முடிவு கூறுங்கள்.

இதுபற்றி, கல்கத்தாவிலிருந்து சில தமிழர்கள் 'குமுதம்' எனும் வார ஏட்டில் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருந்தார்கள்.

"'பராசக்தி' பேசும் படம் பார்த்துக் கதறிய தினமணி கதிர் விமர்சகர்கள் உயிரோடு தான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தமிழனின் தன்மானம் பற்றிக் கவலைப்படும் எழுத்தாளர்கள் எங்குள்ளார்களோ?

ஐயோ தாழ்ந்த தமிழகமே!

அன்பன்,
அரசன்
சென்னை - 21.

தினசரி பொதுமக்களுக்கு வேண்டிய உடன் குணப்படுத்தும் ஓர் சிறந்த மருந்து!

ராம்பென் பெயின்பாம்

தலைவலி, ஜலதோஷம், காய்ச்சல், உடல்வலி முதலியவைகளைக் குணப்படுத்துவதில் தலை சிறந்தது!

ராம்பென் பெயின்பாம்

எல்லோர் இல்லத்திலும் என்றும் இருக்கவேண்டிய ஒன்று!!

ராம்பென் பார்மஸூடிக்கல்ஸ், பெங்களூர்-4.

— முழு விற்பனை உரிமையாளர் —

மெடிகல் யூனியன்,

கீழராச வீதி :: புதுக்கோட்டை

தந்தி: LIVOMAZ

போன் எண்: 91. தபால் பெட்டி எண்: 38.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நா